**DEPOSITION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C.105/2019**

| | | |
|---|---|---|
| Deposititon of Witness for | : | PW-5/Lw-18 |
| Name | : | Dr. SaranKrishna |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.08.2025

எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்

அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை

1. நான் தற்சமயம் திருப்பூர் அரசு மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணியில் உள்ளேன். ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியமளிக்கிறேன். கடந்த 05.11.2018 ஆம் தேதி திருப்பூர் அரசு மருத்துவமனையில் இரவு 7:30 மணிக்கு பாபு என்பவர் அவருடைய தாயார் சைத்தூன் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்துள்ளார். அந்த சமயத்தில் எங்களுடைய அரசு மருத்துவமனில் முகமது ஹல்மி என்ற மருத்துவர் பணியில் இருந்து உள்ளார். அவர் தற்சமயம் பணியில் இல்லை எங்களுடைய மருத்துவ கோப்பை பரிசீலனை செய்து பார்க்கும் போது பாபுவுக்கு

சிகிச்சை அளித்த போது கொடுக்கப்பட்ட AR entry இருந்தது. தற்சமயம் காட்டப்படும் ஆவணம் தான் அந்த AR entry அது அ.சா.ஆ–7. சம்பவத்தின் போது சைத்தூன் என்பவருக்கும் காயம் ஏற்பட்டதை பொறுத்து புறநோயாளியாக சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. அதற்குரிய ஆவணம் தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும். OP சீட் அது அ.சா.ஆ–8. அ.சா.ஆ–7 பின்புறம் பாபுவுக்கு ஏற்பட்ட காயங்களை பொறுத்து சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி சம்பவத்தினால் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் தலையில் ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. தலையில் ஏற்பட்ட காயங்கள் வெட்டு காயங்கள், வலது புற கழுத்திலும் வெட்டு காயங்கள் இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது. காயங்களில் எலும்பு முறிவு உள்ளதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. ரைதூனுக்கு ஏற்பட்ட காயங்கள் பற்றிய விவரங்கள் விசாரணையின் போது சொல்லப்படவில்லை என்றால் சரி. OP sheet ல் அவருக்கு ஏற்பட்ட காயங்களை பொறுத்து என்ன சொல்லப்பட்டுள்ளது என்றால் வலது புற சிறுவிரலில் காயங்கள் ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. என்ன வகையான காயம் என்று சொல்லப்படவில்லை அந்த காயங்கள் தன்னிச்சையாக ஏற்படக் கூடியவை என்றால் சரி. பாபு சிகிச்சையின் போது அருவாளால் தாக்கப்பட்டதாக தான் சொன்னதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அ.சா.ஆ–7 ல் வெட்டு காயங்கள் என்று குறிப்பாக சொல்லப்படவில்லை என்றால் தவறு. சிதைந்த காயங்கள் என்று சொல்லி உள்ளோம். அது வெட்டினாலும் ஏற்படும். மதுபோதையில் ஒருவர் கீழே விழும் போது கூர்மையான கற்கள் பட்டால் கொடுங்காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரி.

மறு விசாரணை: இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN
Digitally signed by K R KANNAN
Date: 2025.08.21 19:04:20 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.